## (ஐ) 1964ம் ஆண்டில் அரசாங்கத் துறைக் கைத்தொழில்கள்

கீழே தொடரும் அட்டவணை II (I) ஆ—1, 1962-1964 காலப் பகுதிக்குரிய அரசாங்கக் கூட்டுத் தாபனங்களின் உற்பத்தியைத் தருவதாம்:

அட்டவணை II (ஐ) ஆ—1

### 10 அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் உற்பத்தி 1962—64

| கூட்டுத்தாபனத்தின் பெயர் | உற்பத்தி அலகு | 1963ம் ஆண்டின் உற்பத்தி | 1963ம் ஆண்டின் உற்பத்தி | 1964ம் ஆண்டின் உற்பத்தி |
|---|---|---|---|---|
| இலங்கைச் சீமெந்து கூட்டுத்தாபனம் .. | தொன்கள் .. | 85,700 | 76,764 | 79,500 |
| தேசிய நெசவுக் கூட்டுத்தாபனம் .. | இரு, பருத்தி நூல் | 11,46,745 | 19,56,976 | 21,84,559 |
| இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் .. | 1,044 | 1,467 | 1,958 |
| கிழக்குப் பகுதிக் காகிதக் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் .. | 4,690 | 5,340 | 6,541 |
| பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் அழுக்குச் சோடா | 915 | 985 | 895 |
| | தொன்கள் குளோறின் .. | 217 | 270 | 230 |
| இலங்கை எண்ணை, கொழுப்புக் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் தேங்காயெண்ணெய் .. | 13,163 | 9,467 | 1,961 |
| | தொன்கள் தேங்காய்த்தீன், மிருககோழித் தீன் .. | 20,321 | 19,305 | 21,565 |
| இலங்கைப் பீங்கான் பொருட் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் பீங்கான் கலங்கள் .. | 687 | 770 | 888 |
| இலங்கை கனிப்பொருட் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் கனிப் பொருள் மணல் | 3,383 | 5,020 | 45,503 |
| இலங்கைத் தோல் கூட்டுத்தாபனம் .. | சதுர அடி குரோம் தோல் .. | 5,11,000 | 5,00,100 | 5,11,310 |
| | இரு, ஏனையதோற் பொருட்கள் .. | 1,99,000 | 2,15,400 | 2,16,900 |
| | சோடிகள்—பாதரட்சைகள் .. | 101,000 | 1,62,700 | 1,68,490 |
| இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் .. | சதுர அடி, 3 ஒட்டுப் பலகை .. | 1,10,63,000 | 1,35,58,000 | 1,22,15,658 |

மூலம்: உரிய கூட்டுத்தாபனங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள்

எனவே இரசாயன, எண்ணெய் கொழுப்பு ஒட்டுப்பலகை ஆகிய மூன்று கூட்டுத் தாபனங்களை விட மற்றையவை 1963ம் ஆண்டிலும் பார்க்க 1964ம் ஆண்டில் கூடிய உற்பத்தியைச் செய்தன என்பது காணக்கிடக்கின்றது. இவ்வுற்பத்தியிலேற்பட்ட திருத்தம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கிடைக்கப் பெறும் உற்பத்தி ஆற்றலின் கூடுதலான உபயோகத்தின் காரணமாகவே ஏற்பட்டதெனலாம். இவ்வித சந்தர்ப்பங்களை வழக்கமாக வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் ஆரம்ப நிலைகளிலுள்ள கைத்தொழிற்களில் எதிர்பார்க்கலாம். சீனிக் கூட்டுத்தாபத்தினது உற்பத்தி உயர்வுக்கு பெருமளவு காரணம், அதிகரித்த கரும்புச் பயிர்ச் செய்கையே. காகிதக் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்த மட்டில் இவ்வுயர்வுக்கு பொறி முறை மாற்றங்களும் பெறப்பட்ட பொறிகளின்மேற் செய்யப்பட்ட திருத்தங்களுமே முக்கிய காரணமாம். கூடுதலான அனுபவமும் திருந்திய திறமையும் பெற்ற தொழிலாளர்களுடன், பீங்கான் கூட்டுத்தாபனமும், திருந்தியதும், கூடுதலான அளவிலும் தனது பொருட்களை உற்பத்தி செய்ய முடிந்தது.

உற்பத்தியானது பொதுவிலே விரிவு காண முனைந்திருப்பினும் பல கைத்தொழில்களிலே இவ்வுற்பத்தி அமைக்கப்பட்டிருக்கும் பொறி, இயந்திர உற்பத்தி ஆற்றலைப் பூரணமாகப் பயன்படுத்துவதாக இல்லை. இதற்குச் சிறந்ததொரு உதாரணம், தனது உற்பத்தி ஆற்றலின் பத்திலொரு பாக உற்பத்தியைச் செய்யும்

சீனிக் கூட்டுத்தாபனபாகும். அறுவடைக்குத் தேவையான வேலையாட்களையும், திறமை வாய்ந்த தொழிலாளர்களையும் பெற்றுக்கொள்வதிலேற்படும் பிரச்சினை கள் அதன் உற்பத்திப் பெருக்கத்திற்கு தடையாக உள்ளன. மேலும் வேலையாட் களது உற்பத்தித் திறனும், அவுஸ்திரேலியாவில் பெறப்படும் ஒரு ஆள் நாளுக்கான நாலு தொன்னுடன் ஒப்பிடும் பொழுது, இலங்கையில் அது 0·4 தொன்களாக மிகக் குறைவாக இருக்கின்றது. எண்ணெய், கொழுப்பு கூட்டுத்தாபனத்தின் எண் ணெய் ஆலையும் மிருகத் தீன், இயந்திரமும் கூட, முறையே மதிப்பிடப்பட்ட உற் பத்தி ஆற்றலின் 35 சதவீதத்தையும், 56 சதவீதத்தையுமே பயன்படுத்தும் வித மாக இயங்குகின்றன. முழு உற்பத்தி ஆற்றலின் உபயோகத்திற்குத் தடையாக, எண்ணை ஆலையின் உப பொருட்களிற்கு வெளிச் சந்தைகள் கிடைக்கப் பெறாதமை யும், செலவு குறைந்த சிறு உற்பத்தியாளர்களிடமிருந்து ஏற்படும் கடும் போட்டி யின் விளைவாக கலவைக் கோழித்தீன் கேள்வியில் ஏற்படும் தளம்பல்களையும் முக் கிய காரணங்களாகக் கூறலாம்.

காகித, இரசாயன கனிப்பொருள் மணல் ஆகிய கூட்டுத்தாபனங்களும் கூட உற்பத்தி ஆற்றலின் ¾ பங்கினையே உற்பத்தி செய்தியங்குகின்றன. காகிதக் கூட் டுத்தாபனம் உள்நாட்டு மூலப் பொருட்களைப் பெறுவதிலும், வேலையாட்களைப் பெறுவதிலும் அவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்காதுவிடினும் அறுவடை காலப் போது வேலையாட்கள் வேலைக்கு வராமல் இருக்கும் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. இரசாயனக் கூட்டுத்தாபனம் தான் உற்பத்தி செய்யும் குளோறினிற்கு வேண்டிய சந்தைகளைப் பெற இயலாதிருப்பது, உற்பத்தி விரிவிற்குத் தடையாக இருக்குன்றது. உண்மையில் 1964ல் உற்பத்தி, பெருமளவு நடைபெற்ற இரு வேலை நிறுத்தங்கள், இயந்திரம் பழுதுபட்டமை ஆகிய இரு காரணங்களி னல் வீழ்ச்சியுற்றது. ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியும் இதே விதக் காரணங்களினல் 1964ல் வீழ்ச்சியடைந்தது.

அரசாங்கத்துறைக் கைத்தொழில்களின் உற்பத்தியில் ஏற்பட்ட பொது அதி கரிப்பானது, உற்பத்திச் செலவுகளை மட்டப்படுத்துவதற்கு தவிர்த்து சில கூட்டுத் தாபனங்களில் ஒரு அலகிற்கான உற்பத்திச் செலவு, மாறுச் செலவுகள் கூடிய உற் பத்தியின் மேலாக விநியோகிக்கப்பட்டதன் காரணமாக உண்மையில் வீழ்ச்சி யடைந்தது. வேறு சில தாபனங்களில் செலவுகள், ஒன்றில் மாற்றமுறாமலோ, அன்றி சிறிது ஏற்றமடைந்தோ காணப்பட்டன. இதற்குக் காரணம், உற்பத்தி விரிவினலேற்பட்ட பலனுக்கெதிராக சமபலனுடனே அன்றிக் கூடுதலாகவோ கூலி கள் மூலப் பொருட்களினது விலை உயர்வு, உற்பத்தியாளர் விற்பனை வரி விதிப்பு போன்ற விளைவுகள் எழுந்தமையே.

கூட்டுத்தானங்கள் 1964ம் ஆண்டில் தமது பொருட்கள் மீது விதித்த விலைகள் 1963ம் ஆண்டிலுள்ளதைப் போன்றே இருந்தன. பல்வேறு கூட்டுத்தாபனங்களது விலைக் கொள்கைகள் பல முரணை அம்சங்களைக் கொண்டிருந்தன. சிமெந்து, சீனி காகிதக் கூட்டுத்தாபனங்கள், தமது பொருட்களின் விலைகளை, அப்பொருட்களின் இறக்குமதி விலைகளுடன் செலுத்தப்படவேண்டிய இறக்குமதித் தீர்வைகளைக் கூட்டி நிர்ணயித்தன. எண்ணை, கொழுப்பு கூட்டுத்தாபனத்தினது மிருகத் தீனும் தோற்பொருட் கூட்டுத்தாபனத்தினது பொருட்களும், பீங்கான் ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனப் பொருட்களும் உற்பத்திச் செலவுடன் சேர்க்கப்பட்ட லாப எல்லை யைக் கொண்ட விலைக் கொள்கைக்குட்பட்டனவாம். மற்றைய கூட்டுத்தாபனங் களைப் போலல்லாது தோற்பொருட் கூட்டுத்தாபனம் தனது பொருட்களை விற்ப தில் கடும் போட்டியை எதிர்நோக்க வேண்டி இருப்பதால், அதன் பாதரட்சை களின் விலைகள் போட்டி நிலைகளிலிருப்பதவசியமாகின்றது. முழுவதிலும் ஏற்று

மதிக்கெனவே உற்பத்தி செய்யும் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனமும் இது போன்றே உலக சந்தை விலைகளுக்கமைய போட்டியான விதத்தில் விலைகளை நிர்ணயிப்பதவசியமாகிறது.

அரசாங்கத் துறைக் கைத்தொழில்களில் 1964ல் ஏற்பட்டிருக்கும் திருந்திய உற்பத்தி இயக்கம், அவற்றினது நிதி நிலைமையில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. ஒன்றைத் தவிர, ஏனைய கூட்டுத்தாபனங்கள் அனைத்தும், 1963ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1964ம் ஆண்டில் கூடிய லாபத்தை (அன்றிக்குறைந்த நட்டத்தை) அடைந்திருக்கின்றன என்பதைக் கீழ்த்தரப்பட்டிருக்கும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II (ஐ) ஆ—2

**1963ம் ஆண்டிலும் 1964ம் ஆண்டிலும் 12 அரசாங்கக் கூட்டுத் தாபனங்களால் பெறப்பட்ட இலாபங்கள்**

| கூட்டுத்தாபனத்தின் பெயர் | 1963 இலாபம்/ நட்டம் ரூபா | 1964 இலாபம்/ நட்டம் ரூபா | 1964ம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மூலதனம் ரூபா | பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் வீதமாக 1964ம் ஆண்டுக்குரிய இலாபம் |
|---|---|---|---|---|
| இலங்கைச் சிமெந்துக் கூட்டுத்தாபனம் .. .. | இலாபம் 60,45,418 | இலாபம் 61,36,198 | 8,10,50,893 | 7·57 |
| தேசிய நெசவுக் கூட்டுத்தாபனம் .. | வி. கி. | இலாபம் 11,50 000 | 4,40,00,000 | 2·61 |
| இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் .. | நட்டம் 34,00,000 | இலாபம் 5,00,000 | 3,50,00,000 | 1·43 |
| கிழக்குப் பகுதிக் காகிதக் கூட்டுத்தாபனம் .. .. | இலாபம் 82,068 | நட்டம் 3,71,156 | 2,72,00,000 | |
| தேசிய சிறு கைத்தொழித்தாபனம் .. | நட்டம் 7,00,000 | நட்டம் 6,90,000 | 1,19,98,685 | |
| பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் | நட்டம் 7,79,536 | நட்டம் 7,30,000 | 1,05,00,000 | |
| இலங்கை எண்ணெ, கொழுப்புக் கூட்டுத்தாபனம் .. .. | வி. கி. | நட்டம் 3,50,000 | 90,58,575 | |
| இலங்கைப் பீங்கான் பொருட் கூட்டுத்தாபனம் .. .. | இலாபம் 3,51,000 | இலாபம் 5,07,892 | 90,00,000 | 5·64 |
| இலங்கை கனிப் பொருட் கூட்டுத்தாபனம் .. .. | நட்டம் 6,25,778 | இலாபம் 1,03,000 | 80,96,039 | 1·27 |
| இலங்கைத் தோல் கூட்டுத்தாபனம் .. | இலாபம் 4,43,124 | இலாபம் 4,78,100 | 66,63,998 | 7·17 |
| கைத்தொழித் தோட்டக் கூட்டுத்தாபனம் .. | வி. கி. | நட்டம் 6,373 | 55,22,144 | |
| இலங்கை ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபனம் .. .. | இலாபம் 1,39,326 | இலாபம் 2,67,800 | 52,04,581 | 5·14 |
| மொத்தம் .. | இலாபம் 15,55,622 | இலாபம் 69,95,461 | 25,32,94,915 | 26·7 |

வி.கி = விபரம் கிடைக்கவில்லை.

மூலம்: உரிய கூட்டுத்தாபனங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள். அவ்வெண்தொகைகள் தற்காலிகமானவையும், கணக்குப் பரிசோதனைக்கு உட்பட்டனவையுமாகும்.

அட்டவணை IIல் தரப்பட்டுள்ள 12 கூட்டுத்தாபனங்களுள், 7 லாபத்தையோ அன்றி மிகையையோ காட்டின. நான்கு தாபனங்களில் இம்மிகை உண்மையில் பயன்படுத்தப்பட்ட முதலீட்டின் 5 வீதத்திற்கு மேலாக அமைந்தது. 12 தாபனங் களிலும் பயன்படுத்தப்பட்ட முதலீட்டின் மீதான சராசரி வருவாய் வீதம், 2·76 சதவீதமாக இருந்தது. கூட்டுத்தாபனங்களது நிதி நிலைமையிலேற்பட்ட திருத்தம் நம்பிக்கையூட்டும் ஒரு அம்சமாகும். அரசாங்கத்துறை கைத்தொழில்கள் மேலும் அவற்றிற்கு வேண்டிய மூலதனத்திற்கும் வளர்ச்சிக்கும் இம்மிகைகளைப் பெறுவது அவசியமாகும். மிகைகளைப் பெற வேண்டின் அதற்குரிய வெளிப்படை வழி, உற் பத்தி ஆற்றலின் பூரண உபயோக நிலைக்கு உற்பத்தியை உயர்த்துதலே, இதன் பயனுக ஒரு அலகிற்கான உற்பத்திச் செலவுகள் குறைவதுடன், லாப எல்லையும் உற்பத்திப் பெருக்கத்துடன் உயரும். பல பொருட்களைப் பொறுத்த மட்டில் அவற்றின் இவ்வித அதிகரித்த உற்பத்திக்கு போதுமான கேள்வி இருக்கின்றது.

## புதிய கைத்தொழில் திட்ட முயற்சிகள்:

பல புது அரசாங்க கைத்தொழில் முயற்சிகளிலே முன்னேற்றம் ஏற்பட்டுள் ளது. இவற்றின் தாபிதம் பலதரப்பட்ட நிலைகளிலே முன்னேறியுள்ளன. எஃகுக் கூட்டுத்தாபனத்தின் சுருள் எஃகு ஆலையும், கம்பி ஆலையும் இவ்வாண்டில் கட்டப் பட்டு, 1966ம் ஆண்டின் முற்பகுதியில் அவ்வேலை முடிவடையக்கூடும். வகுக்கப்பட்ட கால அட்டவணைக்கமைய ரயர் கூட்டுத்தாபனத்தின் கட்டட அமைப்பு வேலையும், தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியும் நடந்துள்ளன. ஒரு வருடத்தில் 250,000 ரயர்களை உற்பத்தி செய்யக்கூடிய இத்தொழிற்சாலை 1965ல் தனது உற் பத்தியை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கட்டடத்திற்கு வேண்டிய காணித்திருத்தவேலையையும் தொழிற்சாலைக் கட்டட வேலையையும் பொறுத்த ஆரம்பவேலைகளை காகித மட்டை, கோதுமை அரைவு ஆலைக் கூட்டுத்தாபனங்கள் மேற்கொண்டுள்ளன.